**முக்கிய வார்த்தைகள்:**
*சிலதுர்ரஹ்ம்*
*உறவுமுறை / உறவுகள்*
*மன்னியுங்கள் / மன்னிப்பைத் தேடுங்கள்*
*அருள்கள்*

# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
# வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**10 ஏப்ரல் 2026 / 21 ஷவ்வால் ஹிஜிரி 1447**

## ஈஸார் - தாராள மனப்பான்மையின் உச்சகட்ட நிலை

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. أُوْصِيْ نَفْسِيْ وَإِيَّاكُمْ بِتَقْوَى اللهِ عَزَّ وَجَلّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான "தக்வா" [பக்தியைப்] பற்றிப் பிடிப்பதில் தொடர்ந்து உறுதியாக இருப்போமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடப்போமாக. அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! நமது "தக்வா" வானது, நமது நோக்கங்கள், சொற்கள் மற்றும் செயல்கள் ஆகிய அனைத்தும் சிறப்பாகவும் மேன்மையானதாகவும் அமைவதற்கு வழிகாட்டட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
**ஈஸார்** என்றால் என்ன? **ஈஸார்** என்றால் **சுயநலமற்ற** சிறப்பானதொரு தன்மையாகும். ஒருவர், தனது சொந்த நலனை விட மற்றவர்களின்

தேவைகளுக்கு முக்கியத்துவமளித்து, உச்சகட்டமான **தாராள மனப்பான்மையைப்** பிரதிபலிப்பதாகும்; தனக்குத் தேவையுள்ள போதிலும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவதாகும். இந்த சிறப்பானத் தன்மையானது, சுயநலத்துக்கு முக்கியத்துவமளிக்கும் தற்கால உலகில் மிக வேகமாகக் குறைந்து வருகிறது. அதிர்ஷ்டமாக, நாம் பின்பற்றி வரும் இஸ்லாமிய மார்க்கம் **"ஈஸார்"** ரின் மதிப்பை நமக்குப் போதித்துள்ளதால், ஒரு உண்மையான ஓரிறை நம்பிக்கையாளரின் உயர்ந்த பண்பாகவும், சிறப்பான அடையாளமாகவும் அது அமைந்து விடுகிறது. இந்த சிறப்பானத் தன்மை, திருக்குர்ஆனின் "அல்-ஹஷ்ர்" எனும் அத்தியாயத்தின் 9-வது வசனத்தில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது:

وَٱلَّذِينَ تَبَوَّءُو ٱلدَّارَ وَٱلْإِيمَٰنَ مِن قَبْلِهِمْ يُحِبُّونَ مَنْ هَاجَرَ إِلَيْهِمْ وَلَا يَجِدُونَ فِى صُدُورِهِمْ حَاجَةً مِّمَّآ أُوتُوا۟ وَيُؤْثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ وَمَن يُوقَ شُحَّ نَفْسِهِۦ فَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْمُفْلِحُونَ ﴿٩﴾

பொருள்: "[மதீனாவில் முஹாஜிர்களுக்கு] முன்னரே ஈமானுடன் வீட்டை அமைத்துக் கொண்டவர்கள் [அதாவது, உதவி செய்த அன்ஸாரிகள்], நாடு துறந்து தங்களிடம் குடியேறி வந்தவர்களை [முஹாஜிரீன்களை] நேசிக்கின்றனர்; அன்றியும், அவ்வாறு குடியேறியவர்களுக்கு [முஹாஜிரீன்களுக்கு] **க்கொடுக்கப்பட்டதிலிருந்து** தங்கள் நெஞ்சங்களில் தேவைப்படமாட்டார்கள்; மேலும், தங்களுக்குத் தேவையிருந்த போதிலும், தங்களை விட அவர்களையே [முஹாஜிரீன்களையே, உதவி பெறுவதற்குக் தக்கவர்களாகத்] **தேர்ந்தெடுத்துக்** கொள்வார்கள் - இவ்வாறு எவர்கள் உள்ளத்தின் உலோபித்தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார்களோ, அத்தகையவர்கள் தான் வெற்றி பெற்றவர்கள் ஆவார்கள்"

உச்சகட்டமான **"ஈஸார்"** ரைப் பெற்றிருந்த அன்ஸாரி ஸஹாபாக்களுக்கு அல்லாஹ் மரியாதை செய்தான்; காரணம், அன்ஸாரிகள் கஷ்டமான

நிலையிலும் தேவையுள்ளவர்களாகவும் இருந்த போதிலும் பல விஷயங்களில் முஹாஜிரீன்களுக்கு முன்னுரிமை கொடுப்பவர்களாக இருந்தார்கள்; அவர்கள் முஹாஜிரீன்களுக்கு புகலிடத்தை வழங்கினார்கள் என்பது மட்டுமல்ல, தங்களின் செல்வம், வீடுகள், உணவு, நிலம் மற்றும் வாழ்வாதாரம் ஆகிய அனைத்தையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். அவர்களிடம் காணப்பட்ட இந்த **சுயநலமற்ற** தன்மை, அவர்களின் ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கை மற்றும் அல்லாஹ்வின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பின் காரணமாக அவர்களிடம் ஏற்பட்டிருந்தது. மேற்கண்ட வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, அவர்களைப் பற்றிய நற்பண்புகள் போற்றத்தக்கவையாகும்.

இங்கு, இம்மாதிரியான மேன்மையை நாமும் எவ்வாறு அடைவது? எனும் கேள்வி எழுகிறது.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

இன்றைய "குத்பா" பிரசங்கம், **ஈஸார்** எனும் சிறப்புத்தன்மையை நம்மில் ஏற்படுத்தி, அதனைச் செயல்படுத்துவதற்கு மூன்று உபதேசங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறது:

**முதலாவதாக: கருணைச் சிந்தனையை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் ஈஸார் ரைச் செயல்படுத்த ஆரம்பிப்பது**

மற்றவர்களின் நிலையை உணர்வதன் மூலம் **ஈஸார்** என்பது நம்மிடம் ஏற்படும்; மற்றவர்களின் கஷ்டங்களையும் தேவைகளையும் நமது கஷ்டங்களாகவும் தேவைகளாகவும் நாம் உணரும் போது அத்தன்மை நம்மிடம் ஏற்படும். நமது உள்ளங்கள் கருணைச் சிந்தனையால் நிரப்பமாக ஆகும் போது **ஈஸார்** எனும் பிறர் நலம் கருதும் தன்மை இயற்கையாகவே நம்மிடம் ஏற்படும்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், இச்சீரிய கருத்து மற்றும் கொள்கையைப் பற்றி பின்வருமாறு மிகச் சிறப்பாக நமக்கு நினைவூட்டியுள்ளார்கள்:

*"உங்களில் எவரும், தனக்கு விரும்புவதையே தனது சகோதரனுக்கும் விரும்பாத வரை உண்மையான மு:ஃமினாக [ஓரிறை நம்பிக்கையாளராக] ஆக முடியாது"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்]

நாம் மற்றவர்களின் சூழ்நிலைகளை கவனத்தில் கொள்ள ஆரம்பிக்கும் போது, நாம் நமக்கு நன்மைகளையும் எளிதான வாழ்க்கையையும், அருள்களையும் விரும்புவது போல், அவர்களுக்கும் விரும்ப முற்படுவோம். அங்கிருந்து **ஈஸார்** நம்மிடம் ஏற்படத் துவங்கும்.

**இரண்டாவதாக: ஈஸார் நமது வீட்டிலிருந்து ஆரம்பித்து, பின்பு சமுதாயத்தின் விஷயத்தில் செயல்படுத்த வேண்டும்.**

**ஈஸார்** ரைச் செயல்படுத்துவதற்கான முதலாவது மற்றும் முக்கியமான இடம் நமது சொந்த வீடுகளாகும். வீட்டின் உறவுகள் எப்போதும் சவால்மிக்கதாகவே இருக்கும்; எனினும், ஈஸார் ரை வீட்டில் செயல்படுத்தப்பட்டால் அதற்கு அதிக நன்மைகள் உள்ளன. நாம் நமக்கு நெருக்கமாக உள்ளவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைப் பொருத்து தான், நமது உண்மையான நடத்தைத் தெரிய வரும்.

இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

*"உங்களில் சிறந்தவர், உங்களின் குடும்பத்தாருக்குச் சிறந்தவராக இருப்பவர் ஆவார்; நான் உங்கள் அனைவரையும் விட எனது குடும்பத்தாருக்குச் சிறந்தவனாக இருக்கின்றேன்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் இப்னுமாஜா ரஹ்]

நமது அன்றாடச் செயல்பாட்டின் மூலம் நமது குடும்பத்தாருக்கிடையே **ஈஸார்** ரை நாம் வெளிப்படுத்த முடியும்; உதாரணமாக, இந்த ஷவ்வால் மாதத்தில் நமக்குப் பிடித்தமான உணவுகளை, முதல்முறையாகச் சாப்பிட்டுப் பார்க்க விரும்பும் சிறு குழந்தைகளுக்கு வழங்கலாம்; அவ்வாறே, நாம் சோர்வாக இருந்த போதிலும் வீட்டு வேலைகளைச் செய்து, உதவுவதில் ஆர்வம் கொள்ளலாம்; அல்லது நாம் அலுவல்மிக்கவர்களாக

இருந்த போதிலும், நமது குடும்ப உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்பதற்கு நேரத்தை ஒதுக்கலாம்.

**ஈஸார்** ரை குடும்பத்துக்குள் மட்டும் செயல்படுத்தினால் போதுமாகாது; அச்செயல்பாடு, வழக்கமானதாக ஆகும் அளவுக்குச் சமுதாயத்திலும் செயல்படுத்த வேண்டும். நாம் நமது குடும்பத்தார்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்று, நமது அண்டை வீட்டார்கள், சக ஊழியர்கள் மற்றும் சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரின் வாழ்க்கையையும் எளிதாக்க முயற்சிக்க வேண்டும்.

உதாரணமாக, வாகன நிறுத்துமிடத்தில் நமது வாகனத்தை நிறுத்துவதற்காக ஒரு இடத்தை நாம் கண்டு பிடித்தோம்; அங்கு ஒரு வயதானவர், அல்லது ஒரு பெற்றோர் தமது பிள்ளைகளுடன் வாகனத்தை நிறுத்த இடம் தேடிக் கொண்டிருந்தால், அந்த இடத்தை நம்மை விட அதிகத் தேவையுள்ள அவர்களுக்கு நாம் **கொடுக்கலாம்**; இது **ஈஸார்** ஆகும். நமது தேவைகளை விட மற்றவர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தான் **ஈஸார்** ஆகும். நாம் சற்று நடந்து சென்று மற்றொரு இடத்தில் நமது வாகனத்தை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டாலும் மற்றவர்களின் தேவைக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். இது ஒரு சின்ன தியாகமாகத் தென்படலாம்; ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் இது மிகப் பெரிய தியாகமாகும்.

**ஈஸார்** என்பது, சரியானதை நாம் செய்ய வேண்டுமெனவும் நமக்கு வழிகாட்டுகிறது. உதாரணமாக, வாகனத்தை நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே நமது வாகனத்தை நிறுத்த வேண்டும். பாதைகளைத் தடுத்தோ அல்லது நமக்கு உரிமையில்லாத இடத்தை, வாகனத்தை நிறுத்த எடுத்துக் கொள்வதன் மூலமாகவோ மற்றவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தக் கூடாது. மற்றவர்களுக்கு கஷ்டம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சற்று தூரம் நடந்து சென்று நமது வாகனத்தை நிறுத்துவதானது, சுய கட்டுப்பாட்டு மற்றும் மற்றவர்களின் நலனைக் கவனத்தில் கொள்வதற்கான அடையாளமாகும்.

**மூன்றாவதாக: மனத்தூய்மையுடன் ஈஸார் ரைச் செயல்படுத்துவது.**

**ஈஸார்** ரைச் செயல்படுத்துவது ஒரு சவால்மிக்க காரியமல்ல, மாறாக, அதனை நேர்மையான எண்ணத்துடன் செயல்படுத்துவது தான் சவால்மிக்கதாகும். குறிப்பாக, நமது **ஈஸார்** ரின் செயல் மற்றவர்களால் பார்க்கப்படா மலிருக்கும் போதும், அல்லது அதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் பிரதிபலன் நமக்குக் கிடைக்காமலிருக்கும் போதும் சவால் இன்னும் கடினமானதாக ஆகி விடுகிறது; இச்சூழ்நிலையில் தான் ஷைத்தான் நம்மிடத்தில் அதிருப்தியின் உணர்வை ஏற்படுத்தி, நமது ஈஸார் ரின் பலன் நமக்குக் கிடைக்காமலாக்கி விடுகிறான்.

அன்பிற்குரிய சகோதரர்களே! நேர்மை மற்றும் உளத்தூய்மையைப் பற்றி திருக்குர்ஆனின் "அல்-இன்ஸான்" எனும் அத்தியாயத்தின் 9-வது வசனத்தில் பின்வருமாறு அல்லாஹ் கூறுவதில் சிந்தனை செய்யுங்கள்:

*[நல்லடியார்கள் மற்றவர்களுக்கு உணவளிக்கும் போது] : "உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகத் தான்; உங்களிடமிருந்து பிரதிபலனையோ அல்லது நீங்கள் நன்றி செலுத்த வேண்டுமென்பதையோ [இதன் மூலம்] நாங்கள் நாடவில்லை"* என்று கூறுவார்கள்.

இவ்விதமானச் சிந்தனையைத் தான், நாம் நம்மில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். **ஈஸார்** ரை முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காகவே செயல்படுத்த வேண்டும்; நமது குடும்பத்தார்கள் அல்லது சமுதாய மக்களின் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென்பதற்காகச் செயல்படுத்தக் கூடாது. நமது ஈஸார் மூலம் நமக்குப் பாராட்டுகள் கிடைக்கவில்லை யென்றாலும், நமது உறுதியான மனநிலை பலஹீனமாகி விடக் கூடாது. நமது நோக்கங்கள் நேர்மையானவையாக இருக்க வேண்டும்; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் வெகுமதியைத் தேடுவதாக இருக்க வேண்டும்.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**

மற்றவர்களுக்கு உளத்தூய்மையுடன் **வழங்குவதற்கும்**. அல்லாஹ்வுக்காக மற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கும், நமது அன்றாட வாழ்க்கையில் **ஈஸார்** ரைச் செயல்படுத்துவதற்கும் நமக்கு நாம் பயிற்சியளித்துக் கொள்வோமாக. நமது சொந்த குடும்பத்தார்களிடமிருந்து ஈஸார் ரைச் செயல்படுத்த ஆரம்பிப்போமாக. நமது முயற்சிகளுக்கு அங்கீகாரம் கிடைக்கின்றதோ, இல்லையோ அமைதியைக் காண தொடர்ந்து முயற்சிப்போமாக; "உங்களுக்கு நாங்கள் உணவளிப்பதெல்லாம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகத் தான்" என்று கூறுவோரில் ஒருவராக அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம்மை ஆக்குவானாக; **ஈஸார்** ரின் தன்மையை ஆர்வத்துடன் பின்பற்றியதற்கான நற்கூலியை நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوْهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْمُ.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا

رَبَّ العَالِمِينَ. َاللَّهُمَّ اكْتبِ السِّلْمِ وَالسَّلاَمِ وَالأَمْنَ وَالأَمانَ ِلْلعَالَمِ ُكِّلِه وَللَّناسِ أَجْمَعِينَ. رَّبَنا آتِنا ِفي الُّدنَيا حَسَنَةً، وِفي الآخِرِة حَسَنًة، وِقنا عَذابَ الَّنارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيَتاءِ ذِي الُقْرَبى، وَيَنْهَى عَنِ الَفحْشَاءِ وَالُمنكرِ وَالبْغيِ، يَعِظُكْم لَعَّلُكْم َتذَّكُرونَ، َفاذُكُروا اللهَ العِظيَم يْذُكْرُكْم، وَاشْكُرُوُه عَلَى ِنعِمِه َيِزْدُكْم، وَاسَأُلوُه ِمن َفضِْلِه ُيْعِطُكم، وَلِذْكُر اللِه َأْكَبُر، وَاللُه َيْعَلُم َما َتصَْنُعوَن.